819/7

APPROVED BY THF TEXT-BOOK COMMITTEE.

STORY-SONGS :: :: :: FOR LITTLE-FOLKS

இளைஞர் கதைப் பாட்டுகள்

முதல் புத்தகம்

17 NO 1958
MADR

SRI
SHANMUKA PUBLISHING HOUSE
Mannargudi, :: Tanjore Dt.

819

Story Songs For Little Folks

FIRST BOOK

இளைஞர் கதைப் பாட்டுகள்

3358

முதல் புத்தகம்

819
OFFICE OF ...
17 NOV 1953
MADRAS

ஸ்ரீ ஷண்முகா பப்ளிஷிங் ஹௌஸ்,

மன்னார்குடி :: தஞ்சாவூர்.

ரிஜிஸ்தர் செய்தது] 1935 [விலை அணா $1\frac{1}{2}$

DEDICATED TO THE CHILDREN

OF

THE TAMIL NADU

2546

முகவுரை

தமிழ் நாட்டில் தாய்ப் பாஷையை ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்குப் போதிப்பதற்கென்று அறிவாளர் பல முறைகளை வகுத்துள்ளனர். "பழயன கழிதலும் புதியன புகுதலும்" என்பது பொருத்தமே. புதிய முறையாகிய கிண்டர்கார்டன் முறையில் புதிய விஷயங்களைச் சிறுவர்கள் விளையாட்டாக அறிந்துகொள்ளுகிறார்கள். இதில் கதையும் பாட்டும் ஓர் முக்கிய ஸ்தானத்தைப் பெற்று இருக்கிறது. குழந்தைகள் கதைகளை கேட்பதிலும் அவற்றை இசையுடன் பாடுவதிலும் ஆவலுள்ளவர்கள்

இச் சிறு புத்தகத்தில் பல ஆசிரியர்கள் பாடிக் கையாளப் பட்டு வருகின்ற கதைப்பாட்டுகளை ஒருங்கே திரட்டி எளிய நடையில் புதியமெட்டுகளில் தொகுத்தனம். கதைகள் யாவும் தெரிந்தவைகளாகையால் அவற்றை வசனபாடமாக இங்கு எழுதவில்லை. உபாத்தியாயர்கள் குழந்தைகளின் அறிவிற்கு ஏற்றவாறு கதையைச்சுருக்கியோ விரித்தோ வசன நடையில் சொல்லிக்கொள்ளலாம் என்பது எங்களதுகருத்து. இஃது ஆரம்ப பாடசாலைச் சிறுவர் சிறுமிகளுக்கு பயன்படுமென்று நம்புகிறோம். போதனாசிரியர்களும் கல்வி அதிகாரிகளும் இதனை ஏற்றுப் பாடமாக வைத்து ஆதரிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

4-4-35 }
மன்னார்குடி } ஸ்ரீ. ஷண்முகா பப்ளிஷிங் ஹௌஸ்

பொருளடக்கம்

விஷயம்			பக்கம்
1.	கணபதி ஸ்துதி	...	5
2.	குரு ஸ்துதி	...	„
3.	ராமனும் சுப்பனும்	...	6
4.	யானையும் பாகனும்	...	„
5.	தவளைகள் அரசனை வேண்டுதல்	...	7
6.	நாட்டெலியும் நகரத்தெலியும்	...	„
7.	காகமும் குடமும்	...	8
8.	நரியும் திராக்ஷையும்	...	9
9.	பெட்டையும் குஞ்சுகளும்	...	„
10.	நரியும் காகமும்	...	10
11.	நாட்டுப்புர மனிதன்	...	11
12.	எலிகள் பூனைக்கு மணி கட்டுவது	...	12
13.	சேவலும் பருந்தும்	...	13
14.	நீர்க்கட்டியும் பாம்பும்	...	14
15.	ஸ்திரீயும் பாம்பும்	...	„
16.	நாயும் நிழலும்	...	15
17.	சோம்பேரி தலையாரி	...	17
18.	தன்கையே தனக்குதவி	...	18
19.	இரண்டு வழிப்போக்கர்	...	19
20.	ஸ்ரீ சுப்ரமணியம் (கும்மி)	...	20
21.	ஸ்ரீ ராமர் „	...	21
22.	ஸ்ரீ கிருஷ்ணன் „	...	22
23.	நாமாவளி I „	...	23
24.	„ II „	...	24

1. கணபதி ஸ்துதி.

கணபதியே மத கஜமுகனே
குணமதியைத் தரும் சிவசுதனே
மலர்கொண்டுன் தாள் பூஜிப்போம்
மலைமகள் மைந்தா மகிழ்ந்தருளாய்
கரியுரு கொண்ட கண்ணியனே
பரிவுடனெமையாள் புண்ணியனே
தேங்காய் மோதகம் எள்ளுருண்டை
பாங்காய்ப் பலவும் படைத்திடுவோம்
பாடிப் பாடிப் பணிகின்றோம்
நாடிய வரங்களை நயந்தருளாய்—(கணபதியே.)

2. குரு ஸ்துதி.

குருவை வணங்க வேண்டும்—பாலர்களே (குரு)
குருவை வணங்கினால் குறைவொன்றுமில்லையென்று
கூடிச்சிரஸில் கையை கூப்பித்தொழுது நின்று
பக்ஷத்துடனே நல்ல படிப்பும தனுக்கொத்த
பழக்கமும் பண்ணுவித்துப் பாராட்டும்பரிசுத்த
நம்மை மேன்மைப்படுத்த நல்லகதைகள் கூறி
நல்வழி காட்டிடுவார் நயந்துநாம் மனந்தேறி
கஷ்டங்கள் தீருமே இஷ்டங்கள் சேருமே
கனவிலு மறவாமல் கருத்தாய் நாம்பாருமே (குரு)

3. ராமனும் சுப்பனும்

"கூடி அடி போடுவோம்" என்ற மெட்டு

ராமனும் சுப்பனும் இரண்டு பேரும்
தோட்டத்திலே பசுவுக் கருகில்
பந்துவிளை யாடும்போது
சொம்பை இடறி பாலைக்கொட்டவே
இரண்டுபேரும் நடுநடுங்கி
விழித்துக் கொண்டிருக்கும்போது
மறைவில் நின்று பார்த்த தாயார்
அவ்விடத்தில் வந்து சேரவே
பாலைக்கொட்டின தார்யென்று
ராமனைக் கேட்கும்போது
நாங்கள்பாலைக் கொட்டவில்லை
என்றுபதில் சொல்லவே
பொய்யுரைத்த ராமனுக்கு
நல்லதண்டனை கிடைத்ததாம்.
மெய்யுரைத்த சுப்பனுக்கு
நல்லஇனும் கிடைத்ததாம்.

4. யானையும் பாகனும்

யானைக்காரன்	யானையேறி
யானையோட்டி	வருகிறான்.
மரத்திலொருகாய்	பறித்தெடுத்து
மத்தகத்தில்	மோதினான்.
குஞ்சரமும்	கோபமுண்டு
அஞ்சாதொரு	காய்பறித்து
கொடியபாகன்	முடியின்மீது
கோபத்துடன்	வீசிற்று.
யானையும்தன்	பழிக்குப்பழி
தானேவாங்கி	கொண்டதாம்

(யா)

5. தவளைகள் அரசனை வேண்டுதல்

"ஆரண்யத்தில்" என்ற மெட்டு

குளத்திலுள்ள தவளை யெல்லாம்
கூட்டம் கூடியே
குலத்துக்கொரு அரசன் வேண்டி
கும்பிட சந்த்ரனை
தென்னமரத் துண்டையுங்கள்
மன்னனாக்கினேன்
சொன்னபடி கேட்டு நீங்கள்
சுகமாய் வாழுங்கள்.
எங்களுக்கு கட்டை ராஜன்
தகாதென்னவே,
உங்களுக்கு கொக்கு ராஜனை
கொடுத்திருக்கிறேன்.
கொக்கு ராஜன் தவளை யெல்லாம்
கொத்தித்தின்னவே
துக்கப்பட்டு துரத்தி விட்டு
மரத்தை வைத்ததாம்.

6. நாட்டெலியும் நகரத்தெலியும்

"பசியால் மெலிந்த" என்ற மெட்டு

நாட்டுப்புறத் தெலி யொன்று
நகரத்தோனும் நண்பனையும்
வீட்டிற்குள்ளே வர வழைத்து
விருந்துகள் பலவும் தந்ததுவாம்

புழுத்த தென்றும் கழித்த தென்றும்
பொருக்கி பலவும் எறிந்து விட்டு
செழித்திருக்கும் அரண்மனைக்கு
சிநேகனை விருந்துக் கழைத்த துவாம்
கொடி கட்டி மணி யியங்க
கூடத்திலே பெருஞ் சாடியிலே
பாற் கட்டி இலந்தை நெல்லி
பழவகை பலவும் காட்டிற்றும்
வேலைக்காரன் விரைந்து வந்து
வெருட்டி வெருட்டி அடித்திடவே
போது மையா விருந் தென்று
புகன்றது நாட்டுப் புரத் தெலியும்.
அதனால் தம்தம் இருப்பிடமே
அவரவர்களுக்கு சுகமாகும். (நாட்டு)

7. காகமும் குடமும்

"ஆரண்யத்தில்" என்ற மெட்டு

பஞ்சத்தினால் பிரபஞ்ச மெங்கும் பரிதவிக்கவே,
பாரிலுள்ள குளம் குட்டைகள் வற்றிப்போகவே
அச்சமயம் காகமொன்று அதிக தாகத்தால்
அலைந்தலைந்து தேடித் தண்ணீர் அகப்படாமலே
மனையினோரம் வைத்திருந்த மட்குடந் தன்னை
மகிழ்ச்சியோடு அதன்மீதேறி மனங் கலங்கவே
தண்ணீர் சிறிது குடத்தினடியில் தங்கி நிற்கவே
தன்னாலான முயற்சிசெய்தும் தனக்கு எட்டாமல்

அருகில்கிடந்த கற்கள்சிலதை அதிலே போடவும்
அடியில் நின்று ஜலம்சிறுக அதன்மேலேவர
அச்சமயம் காகம்கண்டு அதி சந்தோஷமாய்
இச்சையுடன் நீர்குடித்து இன்பம் கொள்ளவே
தாரணியில் கிடைப்ப தொன்று அருமையானலும்
தடையில்லாமல் முயற்சிசெய்ய தட்டாமல் கிட்டும்.

8. நரியும் திராக்ஷையும்

பசியால் மெலிந்த நரியொன்று
பலதிசை களிலும் பார்த்துழன்று
ஒன்றுங் காண தோர் செடியில்
உயர்ந்த திராக்ஷ கொடியதனில்
பழுத்த நல்ல பழங்கண்டு
பசிதீர்ந்திருக்க ஆசை கொண்டு
எட்டிஎட்டி ஆன மட்டும்
குட்டிக் கரணங் கள் போட்டும்
ஒன்றும் எட்டா தது கண்டு
உள்ளத்தாசை யெல்லாம் விண்டு
சி!சீ! இந்தப் பழம் புளிக்கும்
தின்றல் பல்லெல் லாம் இளிக்கும்
எனக் கேனிந்தப் பழமென்று
ஏசிக் கொண்டே போயிற்று.
இந்தக் கதைபோல் சிலர்கஷ்டம்
எடுத்துக் கொண்டும் அவரிஷ்டம்
சரியாய் முடியா ததனலே
சலித்துக் கொள்வா ரதன்மேலே (பசியால்)

9. பேட்டையும் குஞ்சுகளும்

பெட்டையொன்று குஞ்சுகளுடனே
கிணற்றுக் கருகில் தங்கியே
குஞ்சுகளுக்கிறை தேடித்தந்து
பக்ஷத்துடனே வளர்த்ததே.
பெட்டையொருநாள் வெளியில் போகையில்
குஞ்சுகளிடம் சொன்னது
குஞ்சுகளே கிணற்றுக் கருகில்
போகவேண்டாம் என்றதே
குஞ்சு ஒன்று தாய்ச்சொல்மீறி
கிணற்றை எட்டி பார்க்கவே
அதிலே உருவம் தோன்றக்கண்டு
அதனுள்விழுந்து இறத்ததாம். (பெ)

10. நரியும் காகமும்

(கும்மி மெட்டு)

குள்ள நரியும் காக்கையுமாக
வெள்ளேரித் தோட்டம் வைத்ததாம்
தோட்டத்திற்கு வேலிபோட
காட்டுமுள்ளை கொணர்ந்ததாம்
ஆற்றுத்தண்ணீர் எடுத்துஊற்றி
நேர்த்தியாக வளர்த்ததாம்
குறுக்கில் வெள்ளம் வந்திடவே
குள்ள நரிக்கு வழியில்லை
காக்கைமட்டும் பறந்தோடிப்போய்

காத்துவந்ததாம் தோட்டத்தை
பூத்துகாய்த்து பழுத்திருக்குது
பூர்த்தியாக மூடினேன்
என்றுசொல்லி காகமானது
ஏய்த்துவிட்டதாம் நரியையும்
தோலிருக்கபழம் விழுங்கி
திணித்துவைத்ததாம் மண்ணையும்
வெள்ளம்வாடி வழிவிடவே
குள்ள நரியும் வந்ததாம்
வந்துநரியும் பழத்தைப்பார்த்து
வெந்துமனம் நொந்ததாம்
காக்கைபோன்ற கயவர் சிநேகம்
யார்க்குங்கூடா தென்றதாம்
பாரிலுள்ள மனிதர்க்கெல்லாம்
ஏற்றவழி காட்டிற்றும்.

11. நாட்டுப்புர மதனின்

"முத்திநெறி யறியாத" என்ற மெட்டு

நாகரிக மில்லாத, நாட்டுப்புரத் திரு
மனிதர்

வேகமுடன் பட்டினத்து, விருந்தாளி
வீடுவந்தார்.

பாகமதாய் படைத்திருந்த, பலவுணவு
புசித்த பின்பு

மேகமென சப்திக்கும், வாத்தியங்கள்
பல கேட்டார்.
மேளமெனும் வாத்தியமும், மிகமுழங்க
அது கேட்டு
ஆளொருவன் உள்ளிருப்பான், எனக் கருத்தில்
நினைத்தார்கள்.
சொந்தக்காரன் யில்லாத, சமயத்தில்
அருகில் வந்து
பந்தமுடன் பார்த்தார்கள், பக்கம்
ஒவ்வொருவர் நின்று.
உள்ளிருக்கும் கள்ளனையும், ஓடாமல்
பிடிக்க எண்ணி
மெள்ளமெள்ள கரம் நுழையும், வழிபண்ணி
கை நுழைத்தார்.
அவன் கையை இவன்பற்றி, அகப்பட்டான்
திருடனென்று
அதனுள்ளே அனைவருமே, பரிகசிக்க
இரைச்ச லிட்டார்.
மேளக்காரன் வந்து கண்டு, மிக வருந்தி
தன் நஷ்டம்
தாளமுடியா தென்று, தவடை சுத்தி
பண்ணி விட்டான்.
அறிவின்மை காரணமென் றறிந்த இரு
மூடர்களும்
பறிவாக பணம் கொடுத்து, பறந்து சென்றார்
பலர் பழிக்க. (நாகரிகம்

12. எலிகள் பூனைக்கு மணி கட்டுவது

"முத்திநெறி யறியாத" என்ற மெட்டு

வெகு நாளாய் விருந்துண்டு, விளையாடும்
எலிக் கூட்டம்
பகையாளி இலை என்று, பலவிடமும்
திரிந்தனவாம்.
புலிங்கண்ட பூனை யொன்று, புசிக்க
இறை உண்டென்று
நலங்கொண்டு தங்கி அங்கு, நாளொன்ருய்
தின்றதுவாம்.
எலிக்கூட்டம் இதைக்கண்டு என்ன
செய்வோம் எனத்தியங்க
கலி நீங்கும் வழிகாண, தலம் ஒன்றில்
கூடிற்ரும்.
சங்கத்துள்ளோர் பலரும், சப்தமின்றி
யோசிக்கையில்
அங்கத்தின் எலி யொன்று, ஆலோசனை
கூறிற்ரும்.
காலங்கண்ட கிழ எலியும், காட்டிற்ரும்
அதன் கஷ்டம்
சாலவிது! சாலவிது! சாற்றினீர்க
ளெல்லோரும்
கோல மணி கட்டும்விதம் கூறுமென்று
கூப்பிட்டதாம்

முடியாத யுக்திதனை முன்னறிவோர்
செய்கவென்று,
அடியோடே அவை அனைத்தும்,
அலக்ஷியத்திற் கேகிற்கும். (வெகு)

13. சேவலும் பருந்தும்

(நொண்டிச்சிந்து)

வெட்டியான் வீரனென்போன்—கொல்லையில்
எட்டி யிரண்டு சேவல் மேய்ந்துவர
ஒன்றுடன் ஒன்று சண்டை—போட்டபின்
ஒன்றை ஒன்று ஜெயித்து பெருமையுடன்
நின்றதோர் சுவரின்மேல்—அச்சமயம்
சென்றதோர் கழுகதன் மேல் பாய்ந்து
கூறிய நகங்களாலே—சேவலை
வாரியெடுத்துக் கொண்டு போயினதே
ஆதலால் ஜெயத்தின்மேல்—பெருமை
அடைதலென்னளும் அபாயந் தருமே. (வெ)

14. நீர்க்கட்டியும் பாம்பும்

(ஆனந்தக்களிப்பு)

நிலம்பூர் கிரமம் நீர்க்கட்டி—அவன்
நீர்ப்பாய்ச்சும் வேலையில் சாலவும் கெட்டி
ஓர்தினம் காலையில் சென்று—வயலில்
உல்லாசமாகவே தானங்கே நின்று
பாய்ச்சினன் பலதிசை நோக்கி—தண்ணீர்
பாய்ந்தபின் தானும் மண்வெட்டியை தூக்கி

சென்ருன் வரப்பில் விரைவாய்—அவன்
நின்ருன் ஒரு பாம்பை கண்டு மறைவாய்
குளிரால் விரைந்து கிடக்க—தானும்
கொண்டுவந்தான் அதன் குளிரை அடக்க
வீட்டினில் கூட்டைக் கொடுத்து—அவன்
வேண்டிய மட்டும் பாலே விடுத்து
வளர்த்து வருமந்த நாளில்—விசு
வாசமற்று அது அவன் மகன்காலில்
கடித்திட போக நீர்கட்டி—அதை
கம் பாலறைந்து கிடத்திஞன் எட்டி
பாரினில் நஞ்சுடன் யாரும்—சற்றும்
பழகுவது மோசம் என்று நீர் பாரும் (நிலம்பூர்)

15. ஸ்திரீயும் கீரியும்

"ஆரண்யத்தில்" என்ற மேட்டு

பிள்ளே யில்லா ஒருவள் கீரிப்
பிள்ளே வாங்கிஞள்
பிள்ளே பின்ஞல் கடவுள் க்ருபையால்
பிறந்து மகிழ்ந்தனள்.
நிர்ணயமாய் பிள்ளே தன்னே
தொட்டிலிலே விட்டு
தண்ணீர் குடத்தை எடுத்துக் கீரியை
காவல் வைத்துப் போஞள்.
நாகப்பாம்பு பிள்ளேயை தீண்ட
வேகமாய் வர

வேகமுடனே பாய்ந்து கண்டந்
துண்டமாக்கிற்று.
அதனைக் காண்பிக்க வேகமாக
அவள் முன்னே செல்ல
அதனை யறியாப் பேதை குடத்தால்
கீரியைக் கொன்றனள்.
விந்தையான பிள்ளை பிழைத்த
சேதியைக் கண்டு
விசனமுடனே கீரிப்பிள்ளைக்கு
வந்தனம் அளித்தனள் (பிள்ளை)

16. நாயும் நிழலும்

"பசியால் மெலிந்த" என்ற மெட்டு

ஆசையுள்ள நாயொன்று
ஆப்பத் துண்டைக் கண்டெடுத்து
பேசாமல் தன் இருப்பிடத்தை
பிரியமாய் நோக்கிப் போகையிலே
தண்ணீரோடும் வாய்க்கால்மேல்
தனியாய்ப்போகத் தன்னிழலே
தண்ணீர் தன்னில் வேறொரு நாய்
தான் ஓடுவதாய் தாண்டிய தன்
வாயிலுள்ள அப்பத்தை
வாங்கித்தின்னக் கௌவிற்று
ஏயத் தன்வாய் அப்பமதும்
ஏகிற்று நீரில் விழுந்து
ஆசை மிகுதி கொண்டதனுல்
மோசம் நேர்ந்தது பாருங்கள். (ஆசை)

17. சோம்பேரித் தலையாரி

(கும்மி மெட்டு)

சூலக்கரை என்னுமூர்தனிலே,
சுந்தரமென்னும் தலையாரி
மந்தமுடனவன் சொந்தவேலைகளை
எந்தவிதமும் செய்யத்துணியான்.
பக்கமுள்ள தெருச்சோம்பேரிகளுடன்
பகலும் இரவும் சுற்றித்திரிந்து
மிக்கமதியை கெடுக்குமதுதனை
தக்க படியே யருந்தி வந்தான்.
இவ்விதமோர்தினம் கள்ளுக்கடையில்தன்
இஷ்டர்களோடு மதுவருந்தி
எவ்விதமாகவே போதை சிரசேறி
யேசினனே வழிப்போக்கர்களை.
அவ்வழியேபோன அம்பட்டனொருவன்
அருவருப்பாய் மிகுவார்த்தை கேட்டு
எவ்விதம் தோணுமல் தலையாரியை
எட்டி அறைந்தானே கன்னத்திலே.
பட்டதும் புத்திதெளிந்து தலையாரி
பண்ணினதப்பிதம் தானுணர்ந்து
விட்டகன்று அவன் வீணர் சிநேகத்தை
விலக்கிவிட்டானே விவேகமுடன்.
இக்கதையா லேயறிவது யாதெனில்
யாவரும் புல்லர் சிநேகமதை
மிக்கமதியுடன் விட்டகல்வதுடன்
வீணர்மதுக்கடை கூடாதே.

18 தன்கையே தனக்கு உதவி

"கூடி அடி போடுவோம்" என்ற மெட்டு

வானம்பாடி வயலொன்றில்
வந்து கூடுகட்டியே
தானும்குஞ்சும் வசித்திட
சாரும்நிலத்துக் குடையவன்
வந்துவரப்பில் நின்றுசொல்
வசனமெனக்கு சொல்லென
தந்த குஞ்சுகட் குரைத்தது
சதிராய்வெளியில் பறந்துபோய்
நெல் முற்றியது அறுக்கலாம்
நேரும் சிலரைக் கொண்டென
அல்லில் தாய்க்கிதுரைத்திட
அவசரமில்லை யென்றது
மறுநாள்சிற்றப்பன் முதலோர்கள்
வாய்த்தா லறுக்கலா மென்ருர்
பிறகுமிதைக் குஞ்சுகள்
பேணும் தாய்க்குச் சொன்னதே
இன்னும் பய மிலையினி
இயம்பும் வார்த்தை கேட்டுமே
முன்னதாகச் சொலுமென
மொழிந்து இரைக் கேகிற்றே
மூன்ரும் நாள் வயற்காரன்
முனைந்துநாமே நாளைக்கு

ஈன்றநெல்லை அறுத்துமே
எடுத்துப்போக வேணுமென்றான்
இந்தச்சேதி குஞ்சுகள்
இனியதாய்க்குச் சொல்லவே
முந்தவே றிடத்துக்கு
முனைந்துகொண்டு சேர்த்ததே
ஆதலால் ஓர் வேலையை
அவனே செய்யமுன்னின்றால்
தீதில்லாமல் முடிந்திடும்
திறமதா மிதுண்மையே. (வானம்)

19. இரண்டு வழிப்போக்கர்

(நொண்டிச்சிந்து மெட்டு)

1. இரண்டு வழிப்போக்கர்—இளைப்பினால்
இருந்துகளைப்பாறினார் தென்னந்தோப்பில்
2. அவர்களில் சீதரனும்—மாதவனை
அருகிலழைத்து சில வார்த்தைசொன்னான்
3. அன்புள்ளமாதவனே—நாமிங்கே
அரவமில்லாமல் சில காய்கள் பறித்து
4. இன்பமாய் தாகந்தீர்த்து—அதன் பின்னால்
எழுந்து புறப்படலாமென்று புகல
5. சீதரன் வருத்தமுடன்—மாதவனை
சேரவந்து சில சேதி சொன்னான்
6. காய்கள் பறிக்கும்போது—உடையவன்
கண்டுவிட்டால் நம் கரம் பற்றியே

7. நியாயஸ்தலம் போவான்—ஆகையால்
நீதிதவறி நடப்பது குற்றம்

8. என்று இவ்வாறு புகல—சீதரன்
இருக்கட்டுமென்று இளநீர் பறிக்க

9. கண்டான் உடையவனும்—சீதரனை
கரப்பற்றி ஏகினன் நியாயஸ்தலம்

10. விண்டான் சங்கதிகள்—அதிகாரி
விரைவுடன் கேஸை விசாரணை செய்து

11. தண்டித்தார் சீதரனை—ஆகையால்
தவறிடலாகாது நீதிதனை.

ஸ்ரீ சுப்பிரமணியம்

(கும்மி)

1. கூரான வைவேல் பிடித்தாண்டி—அசுரர்
கூற்றமாய் நின்றமர் செய்தாண்டி
சீரான சிவகிரி யாண்டவண்டி—அவன்
சித்ர கலாப மயூரனடி.

2. அன்பருக் கெளியவ னவாண்டி—அவன்
அறத்தைப் பெருக்கும் மேலாண்டி
கன்மந்தவிர் கர்த்த னவாண்டி—அவன்
கருணையைப் பாடி யடியுங்கடி.

3. சிறிய பாலனாய் நின்றாண்டி—நேரே
சிறு நடனம் சீராய் கொண்டாண்டி
பெரியவன் அவனே யாவாண்டி—நேரும்
பேறு வேறெதுவும் வேண்டாண்டி.

4. ஆநந்தப் போதமளித் தாண்டி—கரு
ணனந்தத் திவ்ய லோலனடி
பேரானந்த போக பீரனடி—மறை
பேசரிய பரமே சனடி.

5. நாயினே னேயாட் கொண்டானடி—சிவ
நாதனவன் குருவான வண்டி
தீயனெனக் கருள் செய்தாண்டி— அவன்
சிங்கார வைவேற் செல்வனடி.

6. பன்னிரு கைகளுடை யாண்டி—சிறு
பாலக னென்மனஞ் சேர்ந்தாண்டி
சென்னி பூவிரண்டுடை யாண்டி—சிவ
தேசிக ஞன பரமனடி.

7. மலையினில் வாழும் முத்தனடி—சிவ
மலையேற்ற செங்கதிர் வேலனடி
கலைஎன்ற கார்த்தி கேயனடி—வனப்
புலைகொன்ற தெய்வப் புண்யனடி.

21. ஸ்ரீ ராமர்

(கும்மி)

தேவரெல்லாம் துதித்திடும் தசரதற்கு புத்ரனும்
ஆதிவம்சம் தன்னிலே அவதரித்தார் ஸ்ரீராமர்.
அயோத்தியில்பிறந்துள்ள அழகுஓங்கும்சீதையை
ஐயன்ராமன் மாலையை அன்புடனே சூட்டினர்.
தண்டகாரண்ய வனத்திலே தசரதற்கு மருமகள்
நீண்ட கோதண்டராமனை நீர்பிரிந்த நாளிலே

மாறுவேஷம்தரித்துமாயராவணன் ஆண்டிபோல்
அம்மா பிச்சைபோடென்று அண்டிவந்தான் அருகினில்
பிச்சைபோட்ட சீதையைலச்சை கெட்டராவணன்
இச்சைகொண்டு தேரின்மேல் எடுத்துவைத்து ஓட்டினன்
பறவையான ஜடாயு பார்த்தரக் கனோடுதான்
போர்புரிந்து தோற்றதாம் புவியில்விழுந்து மாண்டதாம்
அனுமார் என்றவானரம் அசோகவனத்தை அழித்ததாம்
அங்கே சீதையைக் கண்டதாம் அதிவேகமாய் தாண்டிற்றும்
குரங்கு எல்லாம் கூடியேகுன்று மலையை தூக்கியே
வரிசையாக வைத்ததாம் வாராவதி கட்டிற்றும்
ராமர் அந்த மார்க்கமாய் லங்கைநகர் நாடியே
ராவணனைக் கொன்றுமே மீட்டுவந்தார் சீதையை
காடுமலையை தாண்டியே கடுகிநகர் வந்தாராம்
பூண்டுகொண்டார் பட்டத்தை பூபதியாய் ஆண்டாராம் (தே)

22. ஸ்ரீ கிருஷ்ணன்

(கும்மி)

கொண்டுவா கொண்டுவாடி—கோபாலனை (கொ)
நீல மேக வர்ணனடி—எங்கள் கண்ணன்
நித்யாநந்த லோலனடி (கொ)
காளிங் கமர்த்தனடி—எங்கள் கண்ணன்
கம்ஸனைக் கொன்றவனடி (கொ)
தூணில் உதித்தானடி—எங்கள் கண்ணன்
கோபிகளை அணைத்தவண்டி (கொ)
தேவகி மைந்தனடி—எங்கள் கண்ணன்
தேசத்தைக் காத்தவண்டி (கொ)

பூதகிபால் உண்டவனடி—எங்கள் கண்ணன்
பூதங்களை வென்றவனடி (கொ)
கோவர்த்தன கிரியை—எங்கள் கண்ணன்
குடையாய்ப் பிடித்த வனடி (கொ)
ராதா ருக்மணிக்கு—எங்கள் கண்ணன்
நாயகனுய் வந்தானடி (கொ)
மதித்தோரைக் காத்த வனடி—எங்கள் கண்ணன்
மதத்தோரைக் கொன்ற வனடி (கொ)
பாண்டவர் சகாயனடி—எங்கள் கண்ணன்
வசுதேவர் மைந்தனடி (கொ)
பிரகலாதனைக் காத்த வனடி—எங்கள் கண்ணன்
இரணியனைக் கொன்முனடி. (கொ)

23. முருக நாமாவளி

1. சூரர் புடைசூரனே சுரர் விருந்தே
சுகங்கொடுசீலனே சிவக்கொழுந்தே
2. வள்ளி மணுளனே வானவர் வீரனே
வரகுணசீலனே மறைபுகழ் தீரனே
3. ஆனந்தபேரே ஆருவமுதே
அரற்கருள் குருவே அரும்பெருந்திருவே
4. கதிர்வேல் முருகா கருணைக்குறவா
கதிர்சேர் சிறுவா கடவுள் நிறைவா
5. தேவர் புகழும் சேனுபதியே
மூவர் பரவும் மூவாமுதலே

6. சிவகிரியரசே சின்மயமே
நவமணிவிளக்கே நாயகமே.

நாமாவளி II.

1. குன்றத்தரசே குணக்கடலே
குறைதீர் நிதியே குருபரனே
2. மலைவருகுகனே மதிமுகனே
மதிதருமிறையே வளர் நிதியே
3. கருணுகரனே கதிர்வேலவனே
கதிவா நிதியே கடவுட்கிறையே

1. ஷண்முக தயா நிதியே சதானந்த தயா நிதியே
கனகக் கருமணியே கருணுகர தயா நிதியே.
2. கொஞ்சிக்கொஞ்சி என்றன்முன் குணமாய் சிவகிரியாய்
தொஞ்சித்தொஞ்சிநடனங்கொள்ளும்துரையேஷண்முகனே
3. முருகா சரணம் முனிவா சரணம்
வருகே டறவுன் வடிவே லருள்வாய்
4. குமரா குருவே குகனே கணசீர்
சமரா புரிதே சிகனே சிவமே
5. குருவாம் குமரன் குகனும் பரமன்
திருமால் மருகன் தெளிவா மமுதே.

The B. N. Press, Educational Printers, Madras.

பாப்பா தமிழ் வாசகம்

பாலசிக்ஷை 1, 2 பாகங்கள்

By S. எக்ஞஸ்வாமி

கவர்ன்மெண்டு டிரெய்னிங் ஸ்கூல், விழுப்புரம்

"துரைத்தனத்தார் அங்கீகாரம் செய்தவை"

குழந்தைகளின் மனப்போக்கை நன்கு விளக்கும் சிறந்த போதனு முறைப்படி இப் புஸ்தகங்கள் தொகுக்கப்பட்டிருக்கின்றன. முதல் பாகத்தில் குழந்தைகள் சுலபமாய் சொல்லக்கூடிய பதங்களேயும், உற்சாகத்துடன் தானுகவே பார்த்துத் தெரிந்து கொள்ளக்கூடிய படங்களேயும், ஆரம்பத்திலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. 'தெரிந்ததிலிருந்து தெரியாதவற்றைப் போதித்தல்' என்ற விதியை அனுசரித்து ஒவ்வொருபதத்திலும் ஒவ்வொரு புதியஎழுத்தைச் சேர்த்து இரண்டு கலர்களில் அச்சிடப்பட்டிருக்கிறது. இரண்டாம் பாகத்தில் பாஷா ஞானம் விஷய ஞானம் ஏற்படுமாறு அப்பியாசங்களும், சிறுவர்கள் மனப்பாடம் செய்யத் தகுந்த விஷயங்களும், அமைக்கப்பட்டிருக்கின்றன. இப்புஸ்தகங்கள் வித்யாபிமானிகளால் நன்கு மதிக்கப்பட்டு பல வருஷங்களாக போர்டு, முனிசிபல், ஏய்டெட் பாடசாலைகளில் பாட புஸ்தகங்களாக நடத்தப்பட்டு வருகின்றன.

பாபா	இரண்டாம் வாசகம்	...	0	3	0
,,	மூன்ரும் வாசகம்	...	0	4	0
,,	நான்காம் வாசகம்	...	0	5	0
,,	ஐந்தாம் வாசகம்	...	0	6	0

ஸ்ரீ ஷண்முகா பப்ளிஷிங் ஹவுஸ், மன்னார்குடி.